# 31 டிசம்பர் 2022 முடிவடைந்த நிதி ஆண்டுக்கான சுருக்க நிதி அறிக்கைகள்

## இயக்குநர்கள்

நியமனமானதிலிருந்து இந்த அறிக்கையின் தேதி வரை பதவியிலிருந்த வங்கி இயக்குநர்களின் பெயர்கள்:

| | | |
|---|---|---|
| தலைவர் : | Datuk Karownakaran @ Karunakaran | Spencer Lee Tien Chye |
| உறுப்பினர்கள் : | Tan Sri Abdul Farid bin Alias (30 ஏப்ரல் 2022 பதவி விலகினார்) | Wong Heng Ning Kevin |
| | Dato' Khairussaleh bin Ramli (1 ஆகஸ்ட் 2022 பதவி நியமனம்) | Lee Yong Guan |
| | Anthony Brent Elam | Renato Tinio De Guzman |

## 31 டிசம்பர் 2022 நிலவிய நிதிநிலை அறிக்கை

| | 2022<br>S$'000 | 2021<br>S$'000 |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| ரொக்கமும் மத்திய வங்கியிலுள்ள இருப்புகளும் | 1,341,444 | 1,089,990 |
| சிங்கப்பூர் அரசாங்கப் பங்குப் பத்திரங்களும் கருவூல உண்டியல்களும் | 2,287,895 | 4,107,134 |
| இதர அரசாங்கப் பங்குப் பத்திரங்களும் கருவூல உண்டியல்களும் | 133,596 | 82,276 |
| கடன் பங்குப் பத்திரங்கள் | 199,013 | 157,652 |
| வங்கிகளிலுள்ள இருப்புகள், வைப்புகள், கொடுக்கப்பட்ட கடன்கள் | 169,888 | 161,854 |
| வரவேண்டிய உண்டியல்கள் | 12,976 | 12,196 |
| வங்கியல்லாத வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முன்பணமும் | 24,354,978 | 24,440,869 |
| சார்புடைய நிறுவனத்திலிருந்து வரவேண்டிய தொகை | 5,935,267 | 5,332,759 |
| இதர சொத்துகள் | 209,095 | 74,119 |
| தள்ளிவைத்த வரிச் சொத்துகள் | 15,921 | - |
| கண்கூடற்ற சொத்துகள் | 74,894 | 82,956 |
| பயன்பாட்டுரிமையுள்ள சொத்துகள் | 39,219 | 46,372 |
| சொத்துகளும் இயந்திரங்களும் | 22,273 | 20,035 |
| **மொத்த சொத்துகள்** | 34,796,459 | 35,608,212 |
| **பொறுப்புகள்** | | |
| மத்திய வங்கிக்குச் சேரவேண்டிய தொகைகள் | 409,365 | 1,237,325 |
| வங்கியல்லாத வாடிக்கையாளர்களின் வைப்புகள் | 30,525,900 | 31,062,264 |
| செலுத்தப்படவேண்டிய உண்டியல்கள் | 99,241 | 86,568 |
| சார்புடைய நிறுவனங்களுக்குச் சேரவேண்டிய தொகைகள் | 9,104 | 6,233 |
| செலுத்தப்படவேண்டிய நடப்பு வருமான வரி | 30,681 | 35,721 |
| இதர பொறுப்புகள் | 268,037 | 180,658 |
| குத்தகைப் பொறுப்புகள் | 39,550 | 46,420 |
| தள்ளிவைத்த வரிப் பொறுப்புகள் | - | 4,968 |
| கீழ்நிலைப்படுத்திய நோட்டுகள் | 504,916 | 505,018 |
| வெளியிடப்பட்ட கடன் பங்குப் பத்திரங்கள் | 808,472 | 372,509 |
| **மொத்த பொறுப்புகள்** | 32,695,266 | 33,537,684 |
| **உரிமையாளருக்குரிய பங்குமுதல்** | | |
| பங்கு மூலதனம் | 2,000,000 | 2,000,000 |
| தக்கவைத்த வருமானம் | 230,258 | 101,813 |
| நேர்மதிப்பு சரியாக்கக் காப்புநிதி | (129,065) | (31,285) |
| **உரிமையாளருக்குரிய மொத்த பங்குமுதல்** | 2,101,193 | 2,070,528 |
| **உரிமையாளருக்குரிய மொத்த பொறுப்புகளும் பங்குமுதலும்** | 34,796,459 | 35,608,212 |
| **இருப்புநிலைக் குறிப்புச் சாரா அம்சங்கள்** | | |
| சார்புநிலைப் பொறுப்புகள் | 237,027 | 212,474 |
| கடப்பாடுகள் | 9,811,764 | 8,212,733 |
| நிதி வருநிலைகள் (கருத்தியலானது) | 6,616,350 | 3,404,397 |
| **மொத்த இருப்புநிலைக் குறிப்புச் சாரா அம்சங்கள்** | 16,665,141 | 11,829,604 |

## விரிவான வருமான அறிக்கை 31 டிசம்பர் 2022 முடிவடைந்த நிதி ஆண்டுக்கானது

| | 2022<br>S$'000 | 2021<br>S$'000 |
|---|---|---|
| வட்டி வருமானம் | 725,334 | 562,609 |
| வட்டிச் செலவு | (283,152) | (234,750) |
| **நிகர வட்டி வருமானம்** | 442,182 | 327,859 |
| கட்டணமும் தரகு வருமானமும் | 209,948 | 243,066 |
| கட்டணமும் தரகுச் செலவும் | (35,145) | (30,753) |
| **நிகர கட்டணமும் தரகு வருமானமும்** | 174,803 | 212,313 |
| வணிக லாபங்களும் அந்நியச் செலாவணி வருமானமும் | 51,914 | 20,600 |
| இதர வருமானம் | 41,051 | 50,533 |
| **மொத்த இதர வருமான அம்சங்கள்** | 92,965 | 71,133 |
| **நடைமுறை செலவுகளுக்கு முந்திய வருமானம்** | 709,950 | 611,305 |
| ஊழியர் மற்றும் பிற ஊதியங்கள் | (281,872) | (263,834) |
| இதர நடைமுறை செலவுகள் | (180,518) | (171,998) |
| **சேதாரத்திற்கு முந்திய நடைமுறை லாபம்** | 247,560 | 175,473 |
| நிதிச் சொத்துகளின் சேதார இழப்புக்காக (ஒதுக்கியது) / வரவு வைத்தது | (73,617) | 6,643 |
| **வரிவிதிப்புக்கு முந்திய லாபம்** | 173,943 | 182,116 |
| வரிவிதிப்பு | (25,498) | (24,937) |
| **வரிவிதிப்புக்குப் பிந்திய நிகர லாபம்** | 148,445 | 157,179 |
| **வரிவிதிப்புக்குப் பிறகு உரிமையாளருக்குரிய நிகர லாபம்** | 148,445 | 157,179 |
| **இதர விரிவான வருமானம்** | | |
| **பிற்பாடு லாபத்திலும் நட்டத்திலும் மறுபகுப்பு செய்யப்படக்கூடிய அம்சங்கள்** | | |
| இதர விரிவான வருமானத்தின்மூலம் நேர் மதிப்பிலான கடன் பங்குப் பத்திரங்களின் நேர் மதிப்பில் நிகர மாற்றம் ("FVOCI") | (115,370) | (62,154) |
| FVOCIல் கடன் பங்குப் பத்திரங்களின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக்கான ("ECL") ஒதுக்கீட்டில் நிகர மாற்றங்கள் | 53 | (88) |
| FVOCIல் கடன் பங்குப் பத்திரங்களின் விற்பனையிலிருந்து / மீட்பிலிருந்து லாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு மறுபகுப்பு | 2,268 | (7,527) |
| இதர விரிவான வருமானத்தின் கூறுகள் தொடர்பான வருமான வரி | 15,269 | 9,407 |
| **காலகட்டத்திற்குரிய இதர விரிவான வருமானம், வரியின் நிகரம்** | (97,780) | (60,362) |
| **காலகட்டத்திற்குரிய மொத்த விரிவான வருமானம்** | 50,665 | 96,817 |
| **உரிமையாளருக்குரிய மொத்த விரிவான வருமானம்** | 50,665 | 96,817 |

## மூலதன வள விகிதம்

வங்கியின் மூலதன வள விகிதமும் மூலதனக் கூறுகளும் பின்வருமாறு:

- CET1 மூலதனத்தில் பணம் செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் உள்ளடங்கும்
- கூடுதல் படி 1 மூலதனம் = நிதியாண்டு 2021ல் கிடையாது
- படி 2 மூலதனத்தில் சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் அறிக்கை 637 எதிர்பார்க்கப்படும் இழப்புக்கு மிகையான கணக்கியல் ஒதுக்குகள் உள்ளடங்கும்

| | 2022<br>% | 2021<br>% |
|---|---|---|
| CET1 மூலதன விகிதம் | 14.2 | 14.0 |
| படி 1 மூலதன விகிதம் | 14.2 | 14.0 |
| மொத்த மூலதன விகிதம் | 18.3 | 18.0 |

| | 2022<br>S$'000 | 2021<br>S$'000 |
|---|---|---|
| பங்கு மூலதனம் | 2,000,000 | 2,000,000 |
| வெளியிடப்பட்ட காப்புநிதி | 100,859 | 70,247 |
| சட்டபூர்வ சரியாக்கங்கள் | (15,921) | - |
| பொதுப் பங்குமுதல் படி 1 மூலதனம் ("CET1") | 2,084,938 | 2,070,247 |
| கூடுதல் படி 1 மூலதனம் | - | - |
| படி 1 மூலதனம் | 2,084,938 | 2,070,247 |
| கீழ்நிலைப்படுத்திய நோட்டுகள் | 500,000 | 500,000 |
| ஒதுக்குகள் | 110,092 | 85,823 |
| படி 2 மூலதனம் | 610,092 | 585,823 |
| தகுதிபெறும் மொத்த மூலதனம் | 2,695,030 | 2,656,070 |

| | 2022<br>S$'000 | 2021<br>S$'000 |
|---|---|---|
| அடிப்படை சரியாக்கங்களுக்குப் பிந்திய மொத்த இடர் மதிப்பீட்டுச் சொத்துகள் | 14,705,621 | 14,792,604 |

## 31 டிசம்பர் 2022 முடிவடைந்த நிதி ஆண்டுக்கான சுயேச்சை தணிக்கையாளரின் அறிக்கை

## மேபேங்க் சிங்கப்பூர் லிமிடெட் உறுப்பினருக்கு சுயேச்சை தணிக்கையாளரின் அறிக்கை

## நிதி அறிக்கைகளின் தணிக்கைக் குறித்த அறிக்கை

### எங்கள் கருத்து

நாங்கள் மேபேங்க் சிங்கப்பூர் லிமிடெட்டின் ("வங்கி") நிதி அறிக்கைகளை, சிங்கப்பூர் நிறுவனங்கள் சட்டம் 1967 ("சட்டம்"), பிரிவு 373ன்படி தணிக்கை செய்திருக்கிறோம். இந்த நிதி அறிக்கைகளில் 31 டிசம்பர் 2022 நிலவிய நிதிநிலை அறிக்கை, விரிவான வருமான அறிக்கை, அத்தேதியில் முடிவடைந்த நிதி ஆண்டுக்குரிய வங்கியின் பங்குமுதல் மாற்ற அறிக்கை, ரொக்கப் புழக்க அறிக்கை, குறிப்பிடத்தக்க கணக்குக் கொள்கைகளின் சுருக்கம் உள்ளடங்கும் நிதி அறிக்கைகளின் குறிப்புகள் ஆகியன உள்ளடங்கும்.

எங்கள் கருத்துப்படி, இணைக்கப்பட்டுள்ள நிதி அறிக்கைகள், நிறுவனங்கள் சட்டம் 1967 ("சட்டம்") சட்டத்தின்படியும் சிங்கப்பூர் நிதிநிலை தாக்கல் தரங்களின்படியும் (FRSs), முறையாகத் தயாரிக்கப்பட்டு, 31 டிசம்பர் 2022 நிலவிய வங்கியின் நிதி நிலையையும், அத்தேதியில் முடிவடைந்த நிதி ஆண்டுக்குரிய வங்கியின் நிதி பலாபலன், பங்குமுதல் மாற்றம், ரொக்கப் புழக்கம் ஆகியவற்றையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன.

### கருத்துக்கான அடிப்படை

நாங்கள் சிங்கப்பூர் தணிக்கை தரங்களுக்கு (SSAs) ஏற்ப தணிக்கை செய்தோம். அந்தத் தரங்களின்கீழ் எங்களுக்குள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் *"நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளர்களின் பொறுப்புகள்"* பகுதியில் மேற்கொண்டு விளக்கப்பட்டுள்ளன. நாங்கள் கணக்கியல் மற்றும் நிறுவன ஒழுங்குமுறை ஆணையத்தின் *நிபுணத்துவ நடத்தைக் குறியீடு மற்றும் பொதுக் கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்கியல் நிறுவனங்களுக்கான நெறிமுறைகள்* (ACRA குறியீடு) ஆகியவற்றின்படியும் சிங்கப்பூரில் நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்வதற்கு அவசியமான நெறிமுறை நிபந்தனைகளின்படியும் வங்கியுடன் சம்பந்தமில்லாத சுதந்திர அமைப்பாகச் செயல்பட்டு, இந்த நிபந்தனைகளுக்கும் ACRA குறியீட்டுக்கும் ஏற்ப எங்களது மற்ற நெறிமுறை பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கிறோம். நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் பொருத்தமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

### இதர விவரங்கள்

இதர விவரங்களுக்கு நிர்வாகமே பொறுப்பாகும். இதர விவரங்களில் பொதுவான விவரங்கள், இயக்குநர்களின் அறிக்கை, துணை விவரங்கள் உள்ளடங்கும், ஆனால் நிதி அறிக்கைகள் மற்றும் எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கை உள்ளடங்காது.

நிதி அறிக்கைகள் குறித்த எங்கள் கருத்தில் இந்த மற்ற விவரங்கள் உள்ளடங்கவில்லை. அதோடு, இது தொடர்பாக எந்தவித உறுதியான முடிவையும் நாங்கள் வெளியிடவில்லை.

நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்வதில், இதர விவரங்களையும் வாசித்து, அவ்வாறு செய்யும்போது, நிதி அறிக்கைகளுடன் அல்லது தணிக்கையில் நாங்கள் கண்டுபிடித்தவற்றுடன் இதர விவரங்கள் ஒத்திருக்கிறதா அல்லது விவரப் பிழை இருப்பதுபோலத் தெரிகிறதா என்பதைப் பரிசீலிப்பது எங்கள் பொறுப்பு. நாங்கள் செய்த தணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, இதர விவரங்களில் விவரப் பிழை இருப்பதாக நாங்கள் முடிவுக்கு வந்தால், அது குறித்து நாங்கள் தகவல் தெரிவிக்கவேண்டும். இது தொடர்பாக நாங்கள் தகவல் தெரிவிப்பதற்கு எதுவுமில்லை.

### நிதி அறிக்கைகளில் நிர்வாகம் மற்றும் இயக்குநர்களின் பொறுப்புகள்

இந்த நிதி அறிக்கைகள் சட்டத்திற்கும் FRSs தரங்களுக்கும் ஏற்றபடி தயாரிக்கப்பட்டு, உண்மையான மற்றும் நியாயமான கருத்தை வெளிப்படுத்தும் வகையில் படைக்கப்படுவது நிர்வாகத்தின் பொறுப்பாகும். அதோடு, அதிகாரமற்ற உபயோகம் அல்லது விற்பனையில் ஏற்படும் இழப்புகளிலிருந்து சொத்துகள் பாதுகாக்கப்படுவதற்கு நியாயமான உறுதியளிக்கக்கூடிய உள் கணக்கியல் கட்டுப்பாட்டு முறையைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்; மற்றும் பரிவர்த்தனைகள் முறையான அதிகாரம்பெற்று, உண்மையான நியாயமான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கவும், சொத்துக் கணக்கைக் கட்டிக்காக்கவும் அவசியமான வகையில் பதிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவது ஆகியவையும் இதில் அடங்கும்.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில், வங்கியால் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றலை மதிப்பிட்டு, பொருத்தமாயின், இது தொடர்பான விவகாரங்களை வெளியிடுவதும் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனத்திற்கான கணக்கியல் அடிப்படையைப் பயன்படுத்துவதும் நிர்வாகத்தின் பொறுப்பு. வங்கியைக் கலைக்க அல்லது செயல்பாட்டை நிறுத்த எண்ணினால் அல்லது இவ்வாறு செய்வதைத் தவிர வேறு சாத்தியமான மாற்றுவழி இல்லாத சூழ்நிலைகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

வங்கியின் நிதிநிலைத் தாக்கல் நடைமுறையைக் கண்காணிப்பது இயக்குநர்களின் பொறுப்புகளில் உள்ளடங்கும்.

# 31 டிசம்பர் 2022 முடிவடைந்த நிதி ஆண்டுக்கான சுருக்க நிதி அறிக்கைகள் (தொடர்ச்சி)

## நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளர்களின் பொறுப்புகள்

மொத்த நிதி அறிக்கைகளில், மோசடி அல்லது பிழையால், விவரப் பிழைகள் இல்லாதிருக்கிறதா என்பதற்கு நியாயமான உறுதி பெற்று, எங்கள் கருத்தை உள்ளடக்கும் தணிக்கையாளர்களின் அறிக்கையை வெளியிடுவதே எங்கள் இலக்கு. நியாயமான உறுதி என்பது உயர் நிலையிலான உறுதியாக இருந்தாலும், சிங்கப்பூர் தணிக்கை தரங்களுக்கு ஏற்ப நடத்தப்படும் தணிக்கை, இருக்கக்கூடிய விவரப் பிழையை எப்போதும் கண்டுபிடித்துவிடும் என்பதற்கு உத்தரவாதமில்லை. மோசடியால் அல்லது பிழையால் விவரப் பிழைகள் ஏற்படலாம். விவரப் பிழைகள் தனியாக அல்லது மொத்தமாக, இந்த நிதி அறிக்கைகளின் அடிப்படையில் பயன்பாட்டாளர்கள் எடுக்கும் பொருளியல் தீர்மானங்களைப் பாதிக்கக்கூடும் என நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட்டால், அவை முக்கியமானவையாகக் கருதப்படும்.

சிங்கப்பூர் தணிக்கை தரங்களின்படி நடத்தப்பட்ட தணிக்கையின் ஒரு பகுதியாக, தணிக்கை முழுவதும் நிபுணத்துவ மதிப்பீட்டைப் பயன்படுத்தி, நிபுணத்துவ ஐயவாதத்தை நிலைநாட்டினோம். அதோடு நாங்கள்:

- மோசடி அல்லது பிழையால் நிதி அறிக்கைகளில் விவரப் பிழைகள் நேரக்கூடிய அபாயத்தை அடையாளம் கண்டு, மதிப்பிட்டு, இந்த இடர்களுக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை மேற்கொண்டு, எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்குவதற்குப் போதுமான, பொருத்தமான தணிக்கை ஆதாரங்களைப் பெறவேண்டும். பிழையால் நேரும் விவரப் பிழையைவிட மோசடியால் நேரும் விவரப் பிழையை அடையாளம் காணாதிருக்கக்கூடிய அபாயம் அதிகம். ஏனெனில், மோசடியில் கூட்டுச்சதி, ஏமாற்று, வேண்டுமென்றே செய்யப்பட்ட விடுபாடுகள், பிறழ்கூற்று அல்லது உள் கட்டுப்பாடு மீறல் ஆகியவை இருக்கக்கூடும்.
- சூழ்நிலைக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைக்க தணிக்கைக்குத் தேவையான உள் கட்டுப்பாட்டைப் பற்றிய புரிந்துணர்வைப் பெறவேண்டும். வங்கியின் உள்கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றி கருத்து தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், நிர்வாகம் செய்த கணக்கியல் உத்தேசங்கள் மற்றும் அது தொடர்பான வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நியாயத்தையும் பரிசீலிக்கவேண்டும்.
- தொடர்ந்து செயல்படக்கூடிய கணக்கியல் அடிப்படையை நிர்வாகம் பயன்படுத்தியது பொருத்தமானதா என்பது பற்றி தீர்மானிக்கவேண்டும். அதோடு, பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில், வங்கி தொடர்ந்து செயல்படக்கூடிய நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றல் குறித்துக் குறிப்பிடத்தக்க ஐயம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் தொடர்பான விவர நிச்சயமின்மை இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். விவர நிச்சயமின்மை இருப்பதாக நாங்கள் தீர்மானித்தால், நிதி அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் குறித்து எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்கவேண்டும், அல்லது இந்த வெளிப்பாடுகள் போதுமானவையாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தைத் திருத்தியமைக்கவேண்டும். எங்களது தீர்மானங்கள், தணிக்கையாளர்களின் அறிக்கை தேதி வரை பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையிலானவை. ஆயினும், வருங்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள், வங்கி தொடர்ந்து செயல்படக்கூடிய ஆற்றலை இழப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.
- வெளிப்பாடுகள் உட்பட, நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த படைப்பு, அமைப்புமுறை, உள்ளடக்கம் ஆகியவற்றையும், நியாயமாகப் படைக்கப்படும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் நிதி அறிக்கைகள் பிரதிநிதிக்கிறதா என்பதையும் பரிசீலிக்கவேண்டும்.

தணிக்கையின் திட்டமிடப்பட்ட அளவு, நேரம், தணிக்கையின்போது உள் கட்டுப்பாட்டில் நாங்கள் அடையாளம் காணும் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளிட்ட தணிக்கையின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புக ஆகியவற்றையும் இதர விவகாரங்களையும் நாங்கள் இயக்குநர்களிடம் தெரியப்படுத்துவோம்.

## மற்ற சட்டபூர்வ, ஒழுங்குவிதி நிபந்தனைகள் குறித்த அறிவிப்பு

எங்கள் கருத்துப்படி, வங்கி இச்சட்டப்படி தேவையான கணக்கு மற்றும் இதரப் பதிவேடுகளைச் சட்டப்படி முறையாகப் பாதுகாத்து வைத்துள்ளது.

**Ernst & Young LLP**
பொதுக் கணக்காளர்கள் மற்றும்
சான்றுபெற்ற பொதுக் கணக்காளர்கள்
சிங்கப்பூர்
21 பிப்ரவரி 2023

இது மேபேங்க் சிங்கப்பூர் லிமிடெட்டின் சுருக்க நிதி அறிக்கைகளின் ஆங்கிலப் பதிப்பிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்ப் பதிப்பாகும். மேவங்கி சிங்கப்பூர் லிமிடெட்டின் தமிழ் வாசகர்கள் சுருக்க நிதி அறிக்கைகளைப் புரிந்துகொள்வதற்காகத் தமிழ்ப் பதிப்புத் தயாரிக்கப்பட்டுள்ளது. மேவங்கி சிங்கப்பூர் லிமிடெட்டின் தணிக்கையான நிதி அறிக்கைகள், தணிக்கையாளர்களின் கருத்து ஆகியவற்றின் ஆங்கிலப் பதிப்பைப் பார்க்கும்படி வாசகர்களிடம் பரிந்துரைக்கிறோம்.

மொழிபெயர்க்கப்பட்ட இந்தத் தமிழ் அறிக்கைக் குறிப்புக்கானது மட்டுமே. மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்ப் பதிப்பின் அர்த்தத்திற்கும் ஆங்கிலப் பதிப்பின் அர்த்தத்திற்கும் இடையில் ஏதேனும் மாறுபாடுகள் இருந்தால், ஆங்கிலப் பதிப்பே மேலோங்கி இருக்கும்.